தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, பங்குனி 4, திருவள்ளுவர் ஆண்டு 2051

2020 மார்ச் 17, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்து, தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல் நீதிநூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

106—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***55175—திரு. டி.ஆர்.பி. ராஜா**:

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2020 மார்ச் 17

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அப்பள்ளி நிறைவு செய்யாததால், இந்த ஆண்டு அதை எடுத்துக்கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெருமைவாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மன்னார்குடி ஒன்றியத்தில் சுற்றிலும் வயல்களால் சூழப்பட்டு ஓர் அழகான சூழ்நிலையில், ஒரு தீவுபோல் காட்சியளிக்கும் கிராமம்தான் வடபாதி கிராமமாகும். அது, ஏறத்தாழ 80 சதவிகிதம் படித்த graduates நிரம்பிய ஒரு பகுதியாகும். மிகவும் தாழ்த்தப்பட்டோர் 90 சதவிகிதம் பேர் வாழும் ஒரு பகுதியாகும். மிகவும் மோசமான ஒரு சூழ்நிலையில் அந்தப் பள்ளிக் கட்டடங்கள் எல்லாம் இருந்து வருகின்றன. இந்தப் பள்ளியில் தற்போது 169 மாணவர்கள் படித்து வருகின்றனர். அங்கே 8 ஆம் வகுப்பில் 40 மாணவர்கள் இருக்க வேண்டுமென்று norms எல்லாம் இருக்கின்றன என்று கூறப்படுகிறது. இதுபோன்று பாதிக்கப்பட்ட மற்றும் மிகவும் தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் பகுதியில் அந்த norms–ஐ எல்லாம் சற்று தளர்த்தி அரசாங்கம் அதை கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி இந்த norms–ஐத் தளர்த்த இயலாது என்றால், தயவுகூர்ந்து அங்கே இரண்டு வகுப்பறைகள் உள்ள கட்டடமாவது நிச்சயம் நீங்கள் கட்டித்தர வேண்டும். ஏற்கெனவே, அங்கே இருந்த ஒரு transformer–ஐயும் நீங்கள் அகற்றித் தந்தீர்கள். அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைத் தவிர, அதே ஒன்றியத்திலுள்ள உள்ளிக்கோட்டை என்ற ஊராட்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் பிரதானக் கட்டடமே மிகவும் மோசமான, சிதிலமடைந்த நிலையில் உள்ளது. அது நிச்சயமாக அகற்றப்பட வேண்டும். ஏனென்றால் மோசமான,

2020 மார்ச் 17]

dangerous ஆன situation அங்கே இருக்கிறது. நீங்கள் அதை அகற்றி, அங்கே புதிய கட்டடம் கட்ட வேண்டும். நீடாமங்கலம் ஒன்றியம், சித்தமல்லி மேல்பாதி என்ற ஒரு கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளி, கோட்டூர் ஒன்றியம், திருமக்கோட்டை மகாராஜபுரம் நடுநிலைப் பள்ளி, உள்ளிக்கோட்டை நடுநிலைப் பள்ளி ஆகிய மூன்று இடங்களிலுமே மிகவும் மோசமான கட்டடங்கள் இருக்கின்றன. அவை நிச்சயமாக அகற்றப்பட வேண்டும்; அவற்றை அகற்றி அங்கே புதிய கட்டடங்கள் கட்டித் தரப்பட வேண்டும். அவை அனைத்தும் பிரதான கட்டடங்களாகும்.

அதேபோல், பாளையக்கோட்டையில் கிராம பொது மக்கள், பெற்றோர்–ஆசிரியர் கழகத்தினர் எல்லோரும் சேர்ந்து, நல்ல முறையில் அந்தப் பள்ளியைப் பராமரித்து வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.ஆர்.பி. ராஜா, ஒரு கேள்வியை எவ்வளவு நேரம்தான் கேட்பீர்கள்?

திரு. டி.ஆர்.பி. ராஜா: அவ்வளவுதான், கேள்வியை முடித்துவிடுகிறேன். அவர்களுக்கு அங்கே போதுமான Lab வசதி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், 24 மாணவர்கள்தான் இருக்கின்றனர். மூன்று ஏக்கர் நிலம் வேண்டும்; 50 மாணவர்கள் தேவை; ஒன்றரை ஏக்கர் நிலம்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, அந்தப் பள்ளியைத் தரமுயர்த்தவில்லையென்றாலும், அங்கே இருக்கிற பள்ளிக் கட்டடங்களைச் சீர்செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்தாலோசிக்கிறேன். நடுநிலைப் பள்ளிகள் உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டிலே வருகின்றன. அதை சிறப்பான முறையில் ஆய்வு செய்து, உடனடியாக புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோல, தனியார் பங்களிப்பின் மூலமாக, பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் சார்பாக பராமரிக்கப்பட்டு வருவதாக மற்றொரு பள்ளியைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டார்கள். அங்கே ஆய்வுக்கூட வசதி செய்யப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அங்கே இரண்டே மாத காலத்தில் ஆய்வுக்கூடம் அமைப்பதற்கு அரசின் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10–05

மற்றொன்றை இங்கே குறிப்பிட்டார்கள். மற்றொரு நடுநிலைப் பள்ளியைப் பற்றியும் இங்கே குறிப்பிடுகிறபோது, அங்கேயும் உள்ள பள்ளி கட்டடம் சரியாக இல்லை, அதை உடனடியாக இடிக்க வேண்டும். கட்டடம் stabilityஆக இல்லை என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். இதையெல்லாம் ஆய்வு செய்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால், இதற்கு முன்னர் கட்டடங்கள் சரியில்லையென்று சொன்னால் அங்கே இருக்கின்ற CEO, மாவட்ட ஆட்சித் தலைவர், கட்டடம் குறித்த பொதுப் பணித் துறையின் நிருவாகப் பொறியாளர் ஆகியோர் இணைந்து பரிந்துரை செய்ததற்குப் பிறகு, பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளருக்கு கடிதங்கள் அனுப்பப்பட வேண்டும். அந்த நடைமுறையை எல்லாம் மாற்றி, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கட்டடங்கள் எங்கே இருக்கின்றனவோ, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில், அங்கே இருக்கிற கட்டட நிருவாகப் பொறியாளர் அவர்களும், CEO அவர்களும் பரிந்துரை செய்தவுடன் கட்டடத்தை இடித்துக்கொள்ளலாம். கட்டடம் இடிக்கப்பட்ட பிறகு ratification செய்வதற்கு பரிந்துரை செய்தால் போதும் என்று உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்று எங்கெங்கு இருக்கின்றனவோ, அந்தக் கட்டடங்களெல்லாம் 100–க்கு 90 சதவிகிதம் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 1, 2 விடுபட்டிருந்தால் அவையும் நிறைவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு வீசிய கஜா புயலால் பல பள்ளிகள் சேதமடைந்தன. இதுகுறித்து நான் 17–7–2019 அன்று அரசுச்

2020 மார்ச் 17]

செயலாளர் அவர்களுக்கும், 15–11–2019 அன்று DISHA மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்திலும்—அப்பொழுது M.P. எல்லாம் இருந்தார்கள்—அவர்களுடன் சேர்ந்து இதையெல்லாம் அரசு நிருவாகத்திடம் எடுத்துக்கூறினேன். ஆனால், இதுவரை அங்கே எந்தவொரு வேலையும் செய்யப்படவில்லை. குறிப்பாகப் பார்த்தால் கஜா புயலால் பாதிக்கப்பட்ட ராதாநரசிம்மபுரம் என்ற கிராமத்தில் இருக்கும் பள்ளிக் கட்டடம் மொத்தமாகவே சேதமடைந்தது. மாணவர்கள் கழிவறையும் இல்லாமல் போய்விட்டது. Compound wall சரிசெய்வதற்கு முடிந்த அளவு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் நிதி வழங்கியிருக்கிறேன். மீதிப் பணிகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைக்கிறேன். நீடாமங்கலம் பேரூராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் இல்லாமல் இரவு நேரங்களில் விரும்பத்தகாத நிகழ்வுகள் எல்லாம் அங்கே நடந்துவருகின்றன. மிகவும் முக்கியமான இந்த கோரிக்கைக்கு தீர்வு காண தயவுசெய்து நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். இறுதியாக ராயபுரம் ஊராட்சியிலுள்ள மேல்நிலைப் பள்ளி குறித்து ஏற்கெனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளேன். இந்த மேல்நிலைப் பள்ளியில் வகுப்பறைகள் இல்லாமல் மாணவர்கள் மரத்தடியில் உட்கார்ந்து பயின்று வருகிறார்கள். மிகவும் மோசமான சூழ்நிலையில் அந்தப் பள்ளி இருக்கிறது. ஏன் அந்த நிலையென்று சொன்னால், school–ன் நிலம் குறித்த பட்டா பிரச்சினை இருந்துவருகிறது. அந்த நிலம் மந்தைவெளிப் புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் உள்ளது. ஆகவே, அதற்கு வேறு இடம் கொடுப்பதற்கும் கிராம மக்கள் தயாராக உள்ளனர். இந்த விஷயத்திலும் அரசு தனிக் கவனம் செலுத்தி இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துத் தரவேண்டும். என் தொகுதியில் பல இடங்களில் smart classes தேவைப்படுகின்றன. அதையும் நீங்கள் வழங்க வேண்டுமென்று கோரி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீடாமங்கலத்தில் இருக்கின்ற பள்ளியில் சுற்றுச் சுவர் சரியாக இல்லை. Compound wall இல்லாததால் அங்கே பல தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆடு, மாடுகள் செல்வதற்கும்கூட வாய்ப்புகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் இந்த ஆண்டு 1,600

உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் அமைப்பதற்கும், ஏறத்தாழ 7,000 நடுநிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் அமைப்பதற்கும் இந்த ஆண்டு நிதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி வருகிறபோது பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் இல்லை என்ற நிலையே தமிழ்நாட்டில் இருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது பல இடங்களிலே smart class வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு 7,500 பள்ளிகளுக்கு smart class கொண்டுவருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின்பேரில் மத்திய அரசு நிதி வழங்கியிருக்கிறது. அப்படி மத்திய அரசு நிதி வழங்குகிறபோது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பள்ளிகளுக்கும் நிதி வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி ஒன்று நடந்தது. Corona–ன் இரைச்சலில் அது அமுங்கிப்போய்விட்டது என்றாலும், தமிழுக்கு அணி செய்கிற அரசு, இந்த அரசு. தமிழுக்கு தொடர்ந்து தொண்டாற்றி வருகிற அரசு, இந்த அரசு. தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கான ஒரு சட்டத்திருத்தத்தை, ஒரு வரலாற்றுச்சிறப்பு மிக்கசட்டத்தைத்திருத்தித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்த அரசுக்கு கன்னித் தமிழ் மக்களின் கற்பூர ஆராதனையை என் தமிழ் வாயிலாக இந்த அவை மூலமாக அம்மாவின் அரசுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய ராதாபுரம் தொகுதியில் இருக்கின்ற வள்ளியூர் ஒன்றியத்தில் சௌந்தரலிங்கபுரம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஓர் ஆரம்பப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியின் ambience, பள்ளிக்குள் நுழைந்தாலே அங்கே சரஸ்வதி வாசம் செய்வதை நீங்கள் உணர்வுபூர்வமாக உணரலாம். அருமையான அந்த ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர இந்த அரசு முன்வருமா என்று கேட்கின்றேன். ஏனென்றால், கேட்ட அனைத்தையும் பெற்றுக்கொள்கிற தொகுதியாக ராதாபுரம் தொகுதி இருந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே தமிழுக்கு அணிசெய்கிற

2020 மார்ச் 17]

இந்த அரசு, தமிழில் கல்வி கற்றால் வேலைவாய்ப்பு நிச்சயம் என்று உறுதி கொடுத்திருக்கின்ற இந்த அரசு, ஓர் அருமையான ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழுக்கு முன்னுரிமை தரப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் காமராஜர் பிறந்த நாள் நிகழ்ச்சியில் தமிழ் வழியில் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயில்கின்ற 192 மாணவர்களுக்கு நிதிகளை வழங்கி ஒரு வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டுதோறும் அது வழங்கப்பட்டுவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் ராதாபுரம் தொகுதியில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதும் குறைவாகத்தான் இருக்கின்றன. இதை ஆய்வு செய்து அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதும் குறைவாகத்தான் இருக்கிறது. மொத்தத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, நம்முடைய அரசால் கொடுக்கப்பட்டிருக்கிற புதிய தொடக்கப் பள்ளிகள் 25, தொடக்கப் பள்ளியிலிருந்து நடுநிலைப் பள்ளியாகத் தரமுயத்தப்பட்ட பள்ளிகள் 10, நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்ட பள்ளிகள் 15, உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளியாக 30 பள்ளிகள்தான் தரமுயர்த்தப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதுகுறித்து மீண்டும் வேண்டுகோள் வைத்திருக்கிறோம். அதனை அவர் கருணையோடு பரிசீலிக்கும்போது, உங்களுடைய கோரிக்கையும் கருணையோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.